REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ThinakaranLK /ThinakaranLK

தினகரன்
THINAKARAN
தினகரன்

2020 ஒக்டோபர் 29 வியாழக்கிழமை

வரு. 88 இல. 257 | October 29, Thursday, 2020 | 20 பக்கங்கள் | 30/-

மிகச்சிறந்த e-Learning பக்கேஜ்கள் மொபிடெல் இடமிருந்து
25GB பக்கேஜ் ரூபா. 150/- + வரிகள்
செயற்படுத்துவதற்கு இன்றே அழையுங்கள் #170#
Sri Lanka Telecom Mobitel

இலங்கைக்கு விஜம் செய்த அமெரிக்க வெளியுறவு செயலாளர் மைக் பொம்பியோ உள்ளிட்ட உயர்மட்ட தூதுக்குழுவினர் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடி போது.

அத்தியாவசிய பணியாளருக்கு

அலுவலக அடையாள அட்டையே ஊரடங்கு சட்ட அனுமதிச் சீட்டு

அத்தியாவசிய சேவைப் பணியாளர்கள் ஊரடங்கு வேளையில் பயணிக்கும் போது தமது அலுவலக அடையாள அட்டையை ஊரடங்கு அனுமதிக்காகப் பயன்படுத்தலாம் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதன்படி சுகாதார சேவைகள், விமான நிலையம், வெளிவிவகார அமைச்சு, தீவு இணைப்பு நிறுவனம் மற்றும் வெகுஜன ஊடகம் ஆகிய துறைகளில் பணிபுரிவோரே தமது அலுவலக அடையாள அட்டையை ஊரடங்கு வேளை அனுமதிக்குப் பயன்படுத்த முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் அவர்கள் தங்கள் பணியிடத்துக்குச் செல்லும் போதும் வெளியேறும் போதும் கொரோனா தொற்று சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளை கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கை இந்திய சமுதாய பேரவையின் புதிய தலைவர் பிரதமரினால் கௌரவிப்பு

இலங்கை இந்திய சமுதாயப் பேரவையின் புதிய தலைவராக நியமிக்கப்பட்ட ராஜு சிவராமன், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்தபோது, இச் சந்திப்பின்போது இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், பிரதமரின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் செந்தில் தொண்டமான் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இலங்கையின் இறைமை, ஜனநாயகம், சுதந்திரத்துடன்

நிலையான அபிவிருத்தியே அமெரிக்காவின் எதிர்பார்ப்பு

வோரன்ஸ் செல்வநாயகம்

இலங்கையின் நிலையான அபிவிருத்தியே அமெரிக்காவின் எதிர்பார்ப்பு எனவும் சீனாவின் எதிர்பார்ப்பு அது வல்ல என்றும் அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக் பொம்பியோ தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்துடன் ஒத்துழைப்புடன் செயற்படுவதற்கு அமெரிக்கா தயாராகவுள்ளதாக குறிப்பிட்டுள்ள அவர், அபிவிருத்தி தொடர்பில் முழுமையான ஒத்துழைப்பை அமெரிக்கா வழங்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சீனாவின் நோக்கம் அதுவல்ல என்கிறார் USA செயலாளர் மைக் பொம்பியோ

பலவேறு சவால்களை வெற்றிகரமாக எதிர்கொண்டு பிராந்திய ரீதியில் முன்னேக்கி பயணிக்கும் இலங்கையின் இறைமை, ஜனநாயகம் 06

இன்று நள்ளிரவு முதல் திங்கள் வரை

மேல் மாகாணத்தில் ஊரடங்குச் சட்டம்

இராணுவத் தளபதி சவேந்திர சில்வா அறிவிப்பு

வோரன்ஸ் செல்வநாயகம்

மேல் மாகாணம் முழுவதற்குமான தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் இன்று 30ம் திகதி நள்ளிரவு 12 மணி முதல் அமுல்படுத்தப்படவுள்ளது.

மேற்படி தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் இன்று நள்ளிரவு முதல் எதிர்வரும் நிர்வாக்கிழமை 02 ஆம் திகதி அதிகாலை 5 மணி வரை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.

அதன்கிணங்க தற்போது கம்பஹா மாவட்டம் மற்றும் மேல் மாகாணத்தின் சில பகுதிகளுக்கும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என்றும் இராணுவத் தளபதி தெரிவித்தார்.

மேல் மாகாணத்திற்கான ஊரடங்குச் சட்டம் நிர்வாக்கிழமை காலை நீக்கப்படும் நிலையில் மக்கள் முண்டியடித்துக் கொண்டு பொருளவு அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு 06

கொரோனா கட்டுப்படுத்தல்;

இலங்கைக்கு உலக வங்கி பாராட்டு

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதில் இலங்கையால் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் வெற்றிகரமானதாக காணப்படுவதாகவும், அதற்கு அவசியமான அனைத்து ஒத்துழைப்புக்களையும் வழங்குவதற்குத் தயாராக 06

அனைத்து நாடுக பயணிக்க இலங்

செய்தியாளர் மாநாட்டில் அ

அனி கோர நாடு என்ற வகையி அனைத்து நாடுகளுடனும் இணை பயணிக்க இலங்கை தயாராகவே உள் தாக இலங்கை வெளியுறவுத அமை

கடன்களுக்கு சலுகை வீடுக குடும்பங்களுக்கு அரசு நிவாரணை

விடுகளில் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்குப் பொருட்களைப் பொதி மூலமாக விநியோகிக்க அரசாங்கம் கவனஞ் செலுத்தியுள்ளதோடு கடன் தவணைகளுக்குச் சலுகை காலம் வழங்குவது தொடர்பாக மும் ஒரு வார காலம் 06

அமெரிக்க இராஜாங்க செயலர் மைக் பொம்பியோ நேற்று உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்ற கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்திற்கு சென்று மாலை அணிவித்து வழிபட்டதுடன் தாக்குதல் இடம் பெற்ற இடங்களையும் பார்வையிட்டார்.

இலங்கை வந்திருந்த

மைக் பொம்பியோ மாலைதீவு பயணம்

அமெரிக்க இராஜாங்க செயலர் மைக் பொம்பியோ உள்ளிட்ட குழுவினர் இலங்கைக்கான விஜயத்தினை முடித்துக் கொண்டு மாலைதீவு நோக்கிப் பயணமாகியுள்ளனர்.

நேற்று மைக் பொம்பியோ உள்ளிட்ட குழுவினர் இலங்கைக்கான விஜயத்தினை மேற்கொண்டிருந்தனர்.

மைக் பொம்பியோ உள்ளிட்ட குழுவினர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை 06

சவேந்திர சில்வா மீதான தடை மீள் பரிசீலனை செய்யப்படும்

செய்தியாளரின் கேள்விக்கு மைக் பதிலளிப்பு

வோரன்ஸ் செல்வநாயகம்

இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவுக்கு எதிராக அமெரிக்க அரசாங்கம் விதித்துள்ள பயணத் தடை தொடர்பில் மீள்பரிசீலனை செய்யப்படும் என அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக் பொம்பியோ தெரிவித்துள்ளார். இலங்கைக்கான இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள அமெரிக்க இராஜாங்க செயலாளர் நேற்றையதினம் ஜனாதிபதி செயலகத்தில் வெளிநாட்டமைச்சர் தினேஷ் குணவர்தனவுடன் இணைந்து நடத்திய செய்தியாளர் மாநாட்டின்போதே அவ்வாறு 06

ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகள் ஒத்திவைப்பு

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அதன் அமர்வுகளை ஒத்திவைக்க நீர்மானித்துள்ளது.

நாட்டில் நிலவும் கொரோனா அச்சம் காரணமாகவே இந்த நீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஆணைக்குழு வட்டாரங்கள் கட்டுக்காட்டியுள்ளன. அதன்படி ஒக்டோபர் 31 ஆம் திகதி வரை ஆணைக்குழுவின் அமர்வுகளை ஒத்திவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியக் கொடுப்பனவு

வீடுகளுக்கு சென்று வழங்க அரசு முடிவு

வோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டில் தற்போது நிலவும் கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் சூழ்நிலையில் வயது முதிர்ந்தோர்களை பாதுகாக்கும் வகையில் அரசாங்கம் பல்வேறு ஆலோசனைகளை வழங்கியுள்ள நிலையில் ஓய்வூதியகாரர்களுக்கான கொடுப்பனவை அவர்களது வீட்டுக்கு கொண்டுசென்று வழங்குவதற்கும் நீர்மானித்துள்ளது. 06

தேக்கி வைக்கப்பட்டுள்ள மீன் தொகையை

தமிழ் தேசிய கூட்டமைப்பு வேட்பாளர்கள் புறக்கோட்டை மொத்த